**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.186/2024 - PW-10**

| | |
|---|---|
| Name | திருமதி.அமுதா |
| Husband/Father Name | பாபு |
| Village /Area | காட்பாடி |
| Taluk | வேலூர் |
| Occupation | காவல் ஆய்வாளர் |
| Age | 45 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 16.03.2026.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது காட்பாடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.03.2019 அன்று அரக்கோணம் நகர காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியிலிருந்த போது அரக்கோணம் கிராமிய காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த திரு.விநாயகம் என்பவர் நிலைய பொறுப்பிலிருந்த போது அரக்கோணம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற வெங்கடேசன் என்பவரது தகவலின் படி மாலை 17.30 மணியளவில் பெற்று அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சை பெற்று வந்த வெங்கடேசன் த.பெ.ராஜேந்திரன் எண்.4, அங்காளம்மன் மேட்டு தெரு, காந்தி நகர், குருவராஜப்பேட்டை, என்பவரிடம் வாக்குமூலம் பதிவு செய்து 18.30 மணிக்கு நிலையம் வந்து அரக்கோணம் தாலுக்கா கிராமிய காவல் நிலைய குற்ற எண்.105/2019 சட்ட பிரிவுகள் 341, 294(b), 324, 307, 506(ii), இதச வின் படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை, புகார் வாக்குமூலம் ஆகியவற்றை அரக்கோணம் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியுள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி முதல் தகவல் அறிக்கையில் ஒரு நகலை எனது புலன் விசாரணைக்காக வேண்டி எனது பார்வைக்கு வைத்ததை நான் 04.03.2019 தேதி அன்று புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு காலை 6 மணிக்கு குருவராஜப்பேட்டை காந்தி நகர், அங்காளம்மன் மேட்டு தெரு புற்று கோயில் மற்றும் ஆலமரம் அருகில் சம்பவ இடத்தை சாட்சிகள் அருண்குமார்,

பெருமாள், ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு 2 மாதிரி வரைபடங்களை வரைந்து பார்வை மகஜரை தயார் செய்தேன். அவைகள் முறையே **அ.த.சா.ஆ.7 முதல் அ.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த பார்வை மகஜரில் சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். சாட்சிகள் வெங்கடேசன், ஐயப்பன், நரசிம்மன், ஜகன், லோகநாதன், ராஜேந்திரன், திருமூர்த்தி, அருண்குமார், பெருமாள், ஆகியோரை தனி தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். காயம் பட்ட வெங்கடேசன் மற்றும் ஐயப்பன் ஆகியோருக்கு சிகிச்சை அளித்த அரக்கோணம் அரசு மருத்துவர் ராஜாராம் மற்றும் மருத்துவர் செல்வகுமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். மேலும் எதிரி ராஜா சென்னை உயர் நீதிமன்றத்தில் முன்ஜாமின் பெற்றதால் அவரை கைது செய்யவில்லை. இத்துடன் என் புலன் விசாரணை முடித்து பணி மாறுதல் காரணமாக வழக்கு கோப்பினை காவல் நிலையத்தில் ஒப்படைத்து சென்றேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கையில் நகலை எனக்கு 03.03.2019 அன்று சுமார் 19 மணியளவில் கொடுத்தார். அந்த முதல் தகவல் அறிக்கையை குற்றவியல் நடுவர் அவர்களுக்கு எந்த தேதியில் அனுப்பினார் என்றால் 03.03.2019 அன்று இரவே அனுப்பிவிட்டார்.

நான் வழக்கு கோப்பை சரியாக பார்க்காமல் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்று 07.03.2019 அன்று தான் முதல் தகவல் அறிக்கையை நடுவர் நீதிமன்றத்துக்கு அனுப்பி இருந்தார் என்று சொன்னால் சரியல்ல.

நான் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்துக்கு அனுபியதற்கான காரணத்தை என் புலன் விசாரணையில் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

03.03.2019 அன்று இரவு 7 மணிக்கு முதல் தகவல் அறிக்கையை பெற்ற பிறகு நான் அ.சா.1யும் மற்ற சாட்சிகளை எந்த இடத்தில் எத்தனை மணிக்கு விசாரித்தேன் என்றால் அரக்கோணம் அரசு மருத்துவமனையில் அ.சா.1 மற்றும் அ.சா.2–யும் விசாரித்தேன். நேரம் எனக்கு சரியாக நியாபகம் இல்லை.

அ.சா.1 வெங்கடேசன் தனது முதல் விசாரணையில் நாங்கள் அவரை சம்பவ இடத்தில் விசாரித்ததாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.1 வெங்கடேசன் தனது குறுக்கு விசாரணையில் தன்னை போலீசார் 10 நாட்கள் கழித்து ஊரில் வந்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் சரியல்ல.

சம்பவ இடத்தில் நான் 1 பார்வை மகஜரை தயார் செய்தேன். மாதிரி வரைபடம் 2 தயாரித்தேன். அந்த பார்வை மகஜரில் 2வது சம்பவத்தை பற்றி குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

முதல் மாதிரி வரைபடத்தில் சம்பவ இடமாக தண்ணீர் குழாய்க்கு

அருகில் சாலையில் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் புகாரிலும் வாக்குமூலங்களிலும் சம்பவம் புற்று கோயில் அருகே நடந்ததாக தான் கூறியுள்ளார்கள் என்றால் குழாய் என்று குறிப்பிடப்பிட்டு கூறவில்லை.

மாதிரி வரைபடத்தில் சம்பவ இடமாக குழாய்யை தான் காண்பித்துள்ளேன் என்றும் புற்று கோயில் காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல.

மாதிரி வரைபடத்தில் சம்பவ இடமாக புற்று கோயிலை காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அ.சா.1, வெங்கடேசன் அ.சா.2 ஐயப்பன் ஆகியோருக்கு எதிராக அரக்கோணம் நடுவர் நீதிமன்றத்தில், வேலூர் மாவட்ட அமர்வு நிதிமன்றத்திலும் SC, ST வழக்கு நிலுவையில் உள்ள விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

எதிரி அ.சா.1,2–ஐ எந்த ஆயதத்தால் தாக்கினார் என்று தெரிய வந்ததா என்றால் கத்தி. அது எந்த வகையான கத்தி என்று விசாரணையில் நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இரும்பு கத்தி என்று தெரிந்து கொண்டேன் ஆனால் அது வெட்டு கத்தியா அல்லது பட்டா கத்தியா அல்லது அரிவாளா அல்லது பேனா கத்தியா என்று குறிப்பிட்டு கூறினார்களா என்றால் இல்லை. நானும் கேட்கவில்லை அவர்களும் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

எதிரி பயன்படுத்தியதாக கூறப்படும் ஆயுதத்தை இந்த வழக்கில் கைப்பற்றினேனா என்றால் இல்லை. அ.சா1., அ.சா.2 ன் உடைய இரத்த கரை படிந்த துணிகளை கைப்பற்றினேனா என்றால் இல்லை.

அ.சா.2 ஐயப்பன் தனது முதல் விசாரணையில் அன்று ரோந்து பணியிலிருந்த போலீசார் ஆட்டோவை வரவழைத்து அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாக கூறியுள்ளார். அது குறித்து விசாரணை ஏதாவது மேற்கொண்டேனா என்றால் அவ்வாறு என்னுடைய விசாரணையில் கூறவில்லை.

ரோந்து பணியில் சென்ற போலீசாரை நான் விசாரித்தேனா என்றால் இல்லை. அ.சா.1, மற்றும் அ.சா.2 ன் உடைய வாக்குமூலங்களை நீதிமன்றத்துக்கு எந்த தேதியில் அனுப்பப்பட்டது என்றால் தேதி எனக்கு தெரியவில்லை.

இந்த வழக்கு சம்மந்தமாக காயம்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்களை எந்த தேதியில் விசாரித்தேன் என்றால் 20.03.2019 அன்று அரக்கோணத்தில் விசாரித்தேன்.

மருத்துவர் ராஜாராம் அ.சா.2–ஐ எந்த ஆயுதத்தால் தாக்கிய விவரத்தை விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டு கூறியுள்ளாரா என்றால் ஆயுதம் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

அ.சா.1, அ.சா.2 எவ்வளவு அரக்கோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்கள் என்றும் அதன் பிறகு சென்னை அரசு மருத்துவமனைக்கு சென்றார்கள் என்ற விவரம் என் புலன் விசாரணையில்

தெரிய வந்தது என்றும் நான் என்று சென்னைக்கு அரசு மருத்துவமனையில் காயம்பட்ட நபர்களை விசாரித்தேன் என்றால் சென்னைக்கு நான் செல்லவில்லை. சென்னை அரசு மருத்துவமனையில் மருத்துவர் செல்வகுமாரை நான் தான் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். தேதி குறிப்பிடவில்லை.

காயம்பட்ட நபர்களின் Discharge summary, Xray, Scan, உள்ளிட்ட மருத்துவ ஆவணங்களை நான் மருத்துவரிடமிருந்து கேட்டு வாங்கினேனா என்றால் வாங்கினேன். எந்த தேதியில் வாங்கினேன் என்றால் காயம் சான்றை வாங்கிய தினத்தன்று வாங்கினேன்.

அ.சா.1, அ.சா.2 எத்தனை நாட்கள் சென்னை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்கள் என்றால் அ.சா.2–11.03.2019 வரை சிகிச்சை பெற்று அதே தேதியில் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

மருத்துவர் செல்வகுமார் அவருடைய விசாரணையில் நாங்கள் அவரிடம் காயம்பட்ட நபர்களின் Discharge summary–ஐ பெறவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல.

அ.சா.3 லோகநாதனை நான் சம்பவ இடத்தில் விசாரித்தேன். அவர் நீதிமன்ற விசாரணையில் அவருக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

அ.சா.5 ஜகநாதன், அ.சா.6 திருமூர்த்தி, அ.சா.7 அருண்குமார் ஆகியோர் சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. சாட்சி பெருமாள், சம்பவத்தை பற்றி எனக்கு தெரியாது என்றும் சாட்சி கையொப்பம் போட சொன்னதால் போட்டதாகவும் கூறியுள்ளார் என்றும் நான் சம்பவ இடத்துக்கு செல்லாமல் சரிவர இந்த வழக்கை புலன் விசாரணை செய்யாமல் எதிரியின் மீது ஒரு பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறு விசாரணை :**</u> இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.03.16 18:10:26 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.